(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 23.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 மே 11, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

3/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திரு. அர்ஜுன் மகேந்திரன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகப் பணியாற்றிய காலப்பகுதி யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியில் பிணை முறி மோசடியொன்று இடம்பெற்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iii) மேற்படி பிணை முறி மோசடியுடன் திரு. அர்ஜுன் மகேந்திரன் நேரடியாக தொடர்புபட்டுள்ளதாக அது தொடர்பில் நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் குற்றஞ்சாட்டப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) திரு. அர்ஜுன் மகேந்திரனை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு நியமிப்பதற்கு விதப்புரை செய்த மற்றும் மேற்படி நியமனத்தை அங்கீகரித்த அரசியல் அதிகாரத் தரப்பு ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

384/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விக்டோரியா நீர்த்தேக்கத்தின் ஆகக் கூடிய நீர்க் கொள்ளளவு 2021 ஆம் ஆண்டளவில் 723 மில்லியன் கன மீற்றர் ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டு சனவரி மாத இறுதியில் அது 428 மில்லியன் கன மீற்றர் வரை குறைவடைந்தது என்பதையும்;

(ii) அந்த நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் சடுதியாக குறைவடைவதற்கு மகாவலி கங்கையின் மத்தியில் ஏற்பட்டுள்ள வெடிப்பொன்றே காரணமாக அமைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மகாவலி கங்கையின் நீர்க் கொள்ளளவு சடுதியாக குறைவடைகின்றமை தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) நீர்த்தேக்க மட்டத்தில் வருடாந்த நீர்க் கொள்ளளவு பற்றிய கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மின்சார உற்பத்திக்காக அதிகளவில் நீரைப் பயன்படுத்துவதனால் கங்கைகளில் நீர் வற்றிப் போதல் / ஆவியாதல் காரணமாக எதிர்காலத்தில் விவசாயத்திற்குத் தேவையான நீரை உரிய காலத்தில் பெற்றுக்கொள்வது சிக்கலாக அமையலாம் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

420/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையர்களை அனுப்புவதற்கு புதிதாக அடையாளங் காணப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட நாடுகளில் வேலைவாய்ப்புகளுக்காக அனுப்பப்பட்ட இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் வெளிநாடுகளில் பணிபுரிந்த இலங்கையர்களினால் இலங்கைக்கு ஈட்டிக்கொடுக்கப்பட்ட அந்நியச் செலாவணி ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 6 ஆண்டுகளுக்கு மேல் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்காக முன்மொழியப்பட்டுள்ள பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் தற்சமயம் நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் பயனடையும் நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

474/2023

கௌரவ புத்திக பத்திறண,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தொழிற்படும் வாடகை வாகனங்கள் மற்றும் அது சார்ந்த சேவைகளை வழங்கும் வெளிநாட்டுக் கம்பெனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் 2021.12.31 ஆம் திகதி வரை மேற்படி கம்பெனி ஒவ்வொன்றினாலும் ஈட்டப்பட்ட வருமானம், ஒவ்வோராண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனை ரூபாய் என்பதையும்;

(iii) மேற்கூறிய காலப்பகுதியில் அத்தகைய கம்பெனி ஒவ்வொன்றினாலும் செலுத்தப்பட்ட வரிப் பணம் ஒவ்வோராண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனை ரூபாய் என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) வாடகை வாகனகள் மற்றும் அது சார்ந்த சேவைகளை வழங்க வெளிநாட்டுக் கம்பெனிகள் இணைந்துள்ளதன் காரணமாக, இலங்கையில் அந்தச் சேவைகளை வழங்கும் நபர்களும் கம்பெனிகளும் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இலங்கையில் தொழிற்படும் வாடகை வாகன சேவையை ஒழுங்குறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

689/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள களுதாவளை பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர மருத்துவரொருவர் நியமிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) அக் காரணத்தினால் பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு நிரந்தர மருத்துவரொருவர் இதுவரை நியமிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்கு மருந்தாளரொருவர் நியமிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வைத்தியசாலையில் இன்றளவில் நிலவுகின்ற வெற்றிடங்கள் எப்போது நிரப்பப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து இதுவரை இவ்வைத்தியசாலையில் எவ்வித புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வைத்தியசாலையை புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

816/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2022.05.09 ஆம் திகதி இலங்கையில் நடந்த கலவரச் சம்பவத்தின்போது, தமது கடமைகளைத் தவறவிட்டிருந்த பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பதவி வாரியாக தனித் தனியாக யாது என்பதையும்;

(ii) அந்த அலுவலர்களுக்கு எதிராக எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி திகதியிலும் அதனை அண்மித்த சில மாதங்களிலும், பிரதிப் பொலிஸ் பதிசோதகர் தலைமையதிபதி ஒருவர் உட்பட சில பொலிசு அலுவலர்களை பகிரங்கமாக துன்புறுத்தியும், கடமைகளுக்கு இடையூறு விளைவித்தும் ஆவேசத்துடன் செயற்பட்ட நபர்கள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இன்றளவில் அந்நபர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், இவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2022.05.09 ஆம் திகதி நடந்த கலவரச் சம்பவத்தின்போது, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்தப் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்நபர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

834/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— பிரதம அமைச்சர் மற்றும் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது காணப்படும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் எண்ணிக்கை மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவை;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்குறிப்பிட்ட அமைச்சுக்களில், தனியார் கட்டிடங்களில் தமது அமைச்சு அலுவலகங்களைப் பேணி வரும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை;

(v) மேற்படி ஒவ்வொரு அலுவலகத்திற்கும் செலுத்தப்படும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவு;

(vi) தனியார் கட்டிடங்களில் பேணிவரப்படும் அமைச்சு அலுவலகங்களை அரசாங்கக் கட்டிடங்களுக்கு கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

850/2023

கௌரவ காமினி வலேபொட,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் நிமித்தம் இலங்கைக்கு கிடைக்கவேண்டிய அந்நியச் செலாவணியில் கணிசமான பகுதி இலங்கைக்கு அனுப்பப்படாமல் வெளிநாடுகளில் தடுத்து வைக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறு தடுத்து வைக்கப்படும் அந்நியச் செலாவணித் தொகையை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்ளக அந்நியச் செலாவணி மோசடிகளைத் தடுத்தல், அவற்றை வெளிப் படுத்திக்கொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தவறாளிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளல் என்பவற்றுக்காக இலங்கையில் காணப்படும் சட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்டவாறான அந்நியச் செலாவணி மோசடிகளைத் தடுப்பதற்காக அந்நியச் செலாவணி சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

3100/2023

கௌரவ லலித் வர்ணகுமார,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டின் பின்னர் தேசிய சேமிப்பு வங்கியில் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பதவியுயர்வுகள் வழங்கப்படும்போது பின்பற்றப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) பதவியுயர்வுகள் வழங்கப்படும்போது, தேசிய சேமிப்பு வங்கியின் தலைமையகக் கிளையில் பணியாற்றிய ஊழியர்கள் தொடர்பில் விசேட ஆதரவு காட்டப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) முகாமையாளர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்படும்போது, அவர்கள் முன்னர் பணியாற்றிய கிளைகளில் அதிக முன்னேற்றம் காட்டியுள்ளமை கவனத்தில் கொள்ளப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

3103/2023

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் நாடெங்கிலும் அமைந்துள்ள பாடசாலைகளில் பணியாற்றுகின்ற அதிபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்கள் மத்தியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுகின்ற அதிபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள அதிபர்களுக்கு சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அதிபர்களுக்கு சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) பொதுச் செயன்முறையின் கீழ் பதில் கடமையாற்றும் அடிப்படையில் பணியாற்றுகின்ற அதிபர்கள் நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படுகின்ற போதிலும் தற்பொழுது இவர்களை நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அதிபர்களை நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்),— (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக் கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— இலங்கையின் வணிக தொழில்முயற்சிகளை இலகுபடுத்தும் சுட்டெண்ணின் (Ease of Doing Business Index) பெறுமானத்தை அதிகரிப்பது தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— இலங்கையின் வணிக தொழில்முயற்சிகளை இலகுபடுத்தும் சுட்டெண்ணின் பெறுமானத்தை அதிகரிப்பது தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை, 2022 ஒக்டோபர் மாதம் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் காலம் தேவைப்படுவதால் குறிப்பிட்ட விசேடகுழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லையானது பாராளுமன்ற நிலையியற் கட்டளை 102 இன் பிரகாரம் 2023 நவம்பர் 22 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யபடுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

ரதன திஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அஷ்வசும கொடுப்பனவுத் திட்டம்,— 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி நன்மைகள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஏப்ரல் 21 ஆம் திகதிய 2328/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அஷ்வசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 6(3)(அ) மற்றும் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 117(2) மற்றும் 117(3) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 02 ஆம் திகதிய 2304/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2இ, 5 மற்றும் 5அ ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக் கட்டளைச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 2292/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*13.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

கமத்தொழில் அமைச்சர்,— இலங்கை ஹதபிம அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் இலக்கம் 2 ஆம் பகுதியின் 23 ஆம் பிரிவின் கீழ் 2022.11.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஹதபிம அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*16

கமத்தொழில் அமைச்சர்,— இலங்கை ஹதபிம அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் இலக்கம் 2 ஆம் பகுதியின் 23 ஆம் பிரிவின் கீழ் 2022.11.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஹதபிம அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

17.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18\.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19\.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20\.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21\.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22\.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23\.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24\.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25\.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26\.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27\.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28\.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29\.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30\.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31\.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32\.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

ருஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.